**தலைப்பு 198 - நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு.**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் முன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாதைத்துவ அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு விடயப் பரப்பு

---

தலைப்பு 198 - நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணங்கள் | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிதி மற்றும் திணைக்களத்தின் கட்டளை களுக்கு இணங்க இணங்காமல் அல்லாமல் கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட உயர்தர நேர்மையுடன் நடைபெறல் வேண்டும் | 1. பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமை | 2.7 |
| | | 2. ஏற்பாடுகளில்லாமல் முற்பணங்களினை கொடுப்பனவு செய்தல் | 2.2.2 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பாடமை. | 2.10 |
| | | 4. உள்ளகக் கணக்காய்விலான குறைபாடுகள் | 2.11 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள் | 2.6 |
| | | 2. மனிதவள முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.12 |

| | | | |
|---|---|---|---|
| 127(2) | தமது நிர்வாகத்தின் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 1. பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள் | 2.1 |
| | | 2. வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் நிதியமீதிகள் | 2.2.1 |
| | | 3. பெறுகை செய்முறையை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.3 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல் | 2.4(அ) |
| | | 2. கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் | 2.4(ஆ) |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரல் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சின் போது பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | 1. எல்லைகளை விஞ்சி கடப்பாடுகளுக்கு உட்படல் | 2.5(அ) |
| | | 2. பாதீடு ஏற்பாடு இல்லாமல் கடப்பாடுகளுக்கு உட்படல் | 2.5(ஆ) |
| | | 3. இ.வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.9 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக்கணக்கிலுள்ள குறைபாடுகள் | 2.8 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

**பிரதான நடவடிக்கைகளுக்கு முரணாக நோக்கங்களின் செயற்பாடுகள்**

2012 இலிருந்து 2017 வரையான காலப்பகுதி வரை பொது நிறுவனங்களிற்காக சீனா அரசாங்கத்திடமிருந்து பிரசவி கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 13,003.3 மில்லியன் தொகையொன்று செலவழிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய பிரசவி கட்டிடங்களை பொருத்துவதன் மூலம் கையளிக்கும் தகவல்கள் 2018 யூன் 30 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 அமுல்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

உள்நாட்டு நிதியங்களை பயன்படுத்துவதன் மூலம் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்கான ஏற்பாடுகள் ரூபா 300 மில்லியன் தொகையானதுடன் 04 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்கான ஏற்பாடுகளின் ரூபா 6,545 மில்லியன் தொகையானது மீளாய்வாண்டில் அமைச்சால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 2,825 மில்லியன் தொகையானது முறையே ரூபா 147 மில்லியன் மற்றும் ரூபா 2,678 மில்லியனாக முறையே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 4,020 மில்லியன் அதாவது ஏற்பாடுகளில் 58.73 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும், இது செயற்திட்டமொன்றில் ரூபா 502 மில்லியன் ஏற்பாட்டை விஞ்சி ரூபா 91 மில்லியன் தொகையொன்று செலவழிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.1 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

**காலநிலை மீட்சி முன்னேற்ற செற்திட்டத்தின் செயன்முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 10 தெரிவு செய்யப்பட்ட நீர்த் தொட்டிகளிற்கான முதலீட்டு திட்டங்களை தயாரிப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், இது 04 நீர்த்தொட்டிகளிற்காக மாத்திரம் திட்டங்களை தயாரித்திருந்தது.

(ii) 12 ஒப்பந்தங்களில், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தால் 18 பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்ட நிலச்சரிவு ஆபத்துக்களை குறைக்கும் செயற்திட்டங்கள் தொடர்பில் 10 தொடங்கப்பட்டிருந்ததுடன், இதில் 05 பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 05 இன் செயன்முன்னேற்றம் 06 சதவீதத்திலிருந்து 45 சதவீதம் வீழ்ச்சியிலிருந்தது.

(iii) வெள்ளங்கள் மற்றும் நிலச்சரிவுகளினால் ஏற்பட வேண்டியிருந்த வசதியீன்மைகளை தவிர்ப்பதற்கான அச்சுறுத்தலான பாலங்கள் மற்றும் மதவுகளின் அபிவிருத்திக்காகவும் மற்றும் முறையே அச்சுறுத்தப்பட்ட சரிவுகளின் அபிவிருத்திக்காகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இனங்காணப்பட்ட 10 பொதிகள் மற்றும் 07 பொதிகளின் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது. இதில் கொழும்பு - வல்லவாய, மட்டக்களப்பு - திருகோணமலை மற்றும் பெரதேனியா - பதுளை வீதிகளின் ஒப்பந்தங்களின் செயனமுன்னேற்றமம் 27 சதவீதத்திலிருந்து 59 சதவீத வீச்சிலிருந்தது.

**2.2.2 உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

**கிங் நில்வளா திசைதிருப்பும் செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிங் நில்வளா திசைத்திருப்பல் செயற்திட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டில் ஏற்பாடுகளில்லாமல் வெளிநாட்டு கம்பனியொன்றுக்கு ஆரம்ப முற்பணங்களாக ரூபா 3,008 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அத்தகைய மேலதிக செலவீனமானது 2018 யூலை 30 வரையிலும் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திட்டங்களை முறையாக தயாரிக்கப்படாமை, வெளிப்படைத்தன்மையை பாதுகாத்தல், செயற்திட்டத்தை இணங்காணலின் விடயங்களிலுள்ள பிரமாணங்களுடன் இணங்கல்கள், ஒப்பந்தகாரரை தெரிவு செய்தல், முற்பணங்களை வழங்கல், அமுல்படுத்தல் மற்றும் பின் மதிப்பீடு போன்றவை தொடர்பில் பொறுப்பான தரப்பினரால் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. என அவதானிக்கப்படவில்லை.

(இ) இந்த செயற்திட்டத்திற்கான அரசாங்கம் செலுத்திய தொகையுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்களவு நலன் பெறப்பட்டிருக்காததுடன் அரச வளங்களானது சிக்கனமற்ற ரீதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஈ) முற்பணங்களின் கொடுப்பனவிற்காக போதியளவற்ற ஏற்பாடுகளை நிரூபிக்கும் போது முற்பணங்களின் கொடுப்பனவிற்காக நிதியத்தை வெளியிடுவது தொடர்பில் பொறுப்பான தரப்பினர்களிற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்படவில்லை.

(உ) ஈடுபடுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததெனவும் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் 2018 ஆம் ஆண்டிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லையெனவும் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறுகைச் செய்முறையூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெறுதல்**

**பெறுகைச் செய்முறையை அமுல்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கண்டி தர்மராஜா கல்லூரியில் நிலநடுக்கம் ஏற்படும் என அச்சுறுத்தப்பட்ட காணியில் 100 மில்லிமீற்றர் தடிப்பினை கொண்டுள்ள கொங்கிறீடானது மெல்லிய கம்பியை போடுவதன் மூலம் போடப்பட்டிருந்த போதும், புதர்கள் அந்தப் பகுதியில் அதிகரித்திருந்தன. அதற்கிணங்க, மூடப்பட்ட கொங்கிறீற்றானது குறித்த நியமத்தில் முடிக்கப்பட்டிருந்ததா இல்லையா என அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கண்டி ஆனந்தா கல்லூரிக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட கறுங்கல் அணைக்கட்டிற்கு கீழ் நீர் வழிந்தோடுவதற்கு கட்டப்பட்ட வடிகால் வேலைகள் 2017 ஆகஸ்ட் 15 அளவிலும், 2018 நவம்பர் 21 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணம் குறித்த நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கண்டி - மஹியங்களை வீதியிலுள்ள சில இடங்களிலுள்ள பாதைக்கு கருங்கல்போடும் இடமிருந்த போதும் இது காலநிலை மீட்சி இனங்காணல் செயற்திட்டத்தினூடாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**2.4 சொத்து முகாமைத்துவம்**

அமைச்சிலுள்ள சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது முகாமைத்துவ நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டியிருந்ததுடன் சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 யூன் 15 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அத்தகைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன், நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவின் பொருள் மெய்மையாய்வு சபையானது 2018 யூன் 30 இலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வானது 2016 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருந்தது.

**(ஆ) முறையாக உரித்தாக்கப்படாத சொத்துக்களினை முறையற்ற ரீதியில் பயன்படுத்துதல்**

கொத்மல நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவத்தின் சர்வதேச பயிற்சி நிறுவனமானது மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான கட்டிடங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 7,029,124 இணை செலவழிப்பதன் மூலம் கட்டிட நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் காணியின் உரிமையாண்மையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பாதீட்டு ஏற்பாடுகளை விஞ்சி கடமைகளினை ஏற்படுத்துதல்**

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 02(அ) பந்தியுடன் இணங்காமல் 06 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 48,452,925 ஏற்பாடுகளிலிருந்து ரூபா 752,715 ஐ விஞ்சி ரூபா 1,128,137 கடப்பாடுகள் ஏற்பட்டிருந்தது.

**(ஆ) ஏற்பாடுகளில்லாமல் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக, ஏற்பாடுகளில்லாமல் 11 செலவின விடயங்களிற்காக ரூபா 2,760,489 கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## 2.6 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அமைச்சு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு பந்திகளிலுள்ள விடயங்களில் பின் மதிப்பீடுகள் முடிவடையாத பந்திகளிற்கான தொடர்பு பின்வருமாறுள்ளது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபடுத்தப்பட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2012<br>2013<br>2014 | 1.3(உ)<br>1.3(எ)<br>3.6 | ஊழியர் கடன்களின் நிலுவை அறவீடு |
| 2012<br>2013<br>2014 | 1.5(அ)<br>1.5(அ)<br>3.8(அ) | மதருஹாமா பொறியியல் பயிற்சிப் பட்டறையில் நிறுத்தப்பட்ட திருத்தப்படாத வாகனங்கள் |
| 2012<br>2013<br>2014 | 1.5(இ)<br>1.5(இ)<br>3.8(இ) | உரிமைாண்மை முறையாக மாற்றப்படாத நீர்த்தொட்டிகள் மற்றும் இயந்திரங்கள் |
| 2012 | 1.7(அ) | திறைசேரியின் அனுமதியில்லாமல் ஊக்குவிப்பு படிகளின் கொடுப்பனவு |
| 2016 | 3.10(ஆ) | வருமானத்தை திரட்டு நிதிக்கு செலவு வைக்காமல் பொது வைப்புக் கணக்கில் செலவு வைப்பதனால் செலவினத்தை ஏற்படுத்துதல் |
| 2016 | 3.11 | தவறான ஆவணங்களின் பயன்படுத்தலுடன் இரண்டு சிரேஷ்ட அலுவலகர்களால் ஜீவன மற்றும் தற்செயலான படிகளைப் பெறுதல் |

## 2.7 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்.

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதியில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் மற்றும் அவற்றின் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு / மிகைகள் | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 2,165.17 | 2,061.69 | 103.48 | 4.78 |
| | மூலதனம் | 31,019.35 | 21,330.98 | 9,688.37 | 31.23 |
| | **மொத்தம்** | **33,184.52** | **23,392.67** | **9,791.85** | **29.51** |
| 2014 | மீண்டெழுபவை | 2,308.70 | 2,279.95 | 28.75 | 1.24 |
| | மூலதனம் | 34,948.44 | 29,815.11 | 5,133.33 | 14.69 |
| | **மொத்தம்** | **37,257.14** | **32,095.06** | **5,162.08** | **13.85** |
| 2015 | மீண்டெழுபவை | 333.29 | 315.45 | 17.84 | 5.35 |
| | மூலதனம் | 6,881.77 | 8,824.48 | (1,942.71) | (28.23) |
| | **மொத்தம்** | **7,215.06** | **9,139.93** | **(1,924.87)** | **(26.68)** |
| 2016 | மீண்டெழுபவை | 434.59 | 408.37 | 26.22 | 6.03 |
| | மூலதனம் | 13,268.62 | 5,184.62 | 8,084.00 | 60.93 |
| | **மொத்தம்** | **13,703.21** | **5,592.99** | **8.110.22** | **59.18** |
| 2017 | மீண்டெழுபவை | 534.89 | 524.25 | 10.64 | 1.99 |
| | மூலதனம் | 9,672.43 | 5,324.68 | 4,347.75 | 44.95 |
| | **மொத்தம்** | **10,207.32** | **5,848.93** | **4,358.39** | **42.70** |

இது தொடர்பில் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,502 மில்லியன் மொத்த தேறிய ஏற்பாடுகளில், எதுவும் பயன்படுத்தாமல் முழுவதுமாக சேமிக்கப்பட்டது.

**(ஆ) மேலதிக ஏற்பாடுகளை மேற்கொள்ளல்**

37 செலவின விடயங்களுடன் தொடர்பான ஏற்பாடுகளிலிருந்து ரூபா 4,140 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்படாமையால் அத்தகைய செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,788 மில்லியன் தொகை மேலதிக ஏற்பாட்டினால் மேற்கொள்ளப்பட்ட தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் 6 சதவீதம் தொடக்கம் 98 சதவீத வீச்சிலிருந்தது.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 19801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறான து | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 25.00 | 20.95 | 7.00 | 11.22 | 54.00 | 34.47 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவையாகவுள்ள கடன் மீதிகளை அறவிடப்படாமை**

கணக்காய்விற்கு கமர்ப்பிக்கப்பட்ட கண்கிணக்க கூற்றின் பிரகாரம், உத்தியோகத்தர்களுக்கு மாற்றப்பட்ட கடன் மீதிகளை தவிர அத்திகதியிலுள்ளவாறான நிலுவை மீதிகள் ரூபா 1,323,349 ஆகவிருந்ததுடன் அத்தகைய நிலுவை மீதிகள் 01 தொடக்கம் 20 வருடங்கள் காலப்பகுதிகளிற்காக இருந்த போதும் அத்தகைய மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கை மந்தமான நிலையிலிருந்தது.

**(ஆ) உத்தியோகத்தர்களுக்கு மாற்றப்பட்ட கடன் மீதிகளை அறவிடப்படாமை**

இந்த அமைச்சின் வேலையிலிருந்து ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு மாற்றப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் ரூபா 614,763 தொகையானது 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாதாந்த கணக்குகள் பொழிப்புகளினூடாக அறவிடப்பட வேண்டியிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 வங்கிக் கணக்குகளை கையாளுவிலுள்ள குறைபாடுகள்

வழங்கப்பட்டு 06 மாதங்களிற்கு காலாவதியாக்கப்பட்ட ரூபா 299,149 தொகையான 11 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 ஆவணங்கள் மற்றும் புத்தகங்களை பேணாமை

அமைச்சானது பின்வரும் ஆவணங்களை பராமரித்திருக்கவில்லை.

| | ஆவண வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | கணனிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்களின் பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (இ) | இலத்திரனியல் உபகரண பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (ஈ) | நட்டங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

## 2.11 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் தொழிற்பாடுகளை ஒப்பீடு செய்யும் போது உள்ளகக் கணக்காய்வு பிரிவின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு உத்தியோகத்தர்கள் அமர்த்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதி அமைச்சின் செயலாளரின் 2016 யூன் 10 ஆந் திகதிய 22/2016 ஆம் இலக்க முகாமைத்து கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் ஐ.அ.டொலர் 10 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட மொத்த கிரயத்துடனான வெளிநாட்டு நிதியங்களை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி செயற்திட்டங்களிற்காக உள்ளகக் கணக்காய்வாளர் தாமதமில்லாமல் நியமிக்கப்பட வேண்டும். இதற்கு முரணாக, செயற்திட்ட அமுலாக்கல் பிரிவுகளால் தெரிவு செய்யப்பட்ட 05 உள்ளகக் கணக்காய்வாளரை உள்ளடக்கிய உள்ளகக் கணக்காய்வு குழுவானது ஐ.அ.டொலர் 153.8 மில்லியன் செயற்திட்ட கிரயத்துடனான காலநிலை பரீட்சிப்பு மீட்சி முன்னேற்ற செயற்திட்டத்திற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே நிதிப்பிரமாணம் 133 இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளகக் கணக்காய்வுக் குழு செயற்படுத்தியிருக்கவில்லை.

## 2.12 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 235 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க நபரொருவருக்கான செலவினம் ரூபா 583,126 ஆகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 89 | 29 | 60 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 47 | 27 | 20 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 228 | 204 | 33 | 09 |
| (iv) | ஆரம்ப நிலை | 144 | 143 | 24 | 23 |
| | **மொத்தம்** | **508** | **403** | **137** | **32** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) தேவையான அளவை விஞ்சி பதவியணியை அனுமதித்தல்**

மீளாய்வாண்டின் இறுதியளவில் 137 வெற்றிடங்களாகவிருந்த போது அத்தகைய பதவியணிகளின் வெற்றிடங்களின் அளவானது 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட ஒக்கீட்டுக் கணக்குகளின் பிரகாரம் பயன்படுத்தாமல் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை சேமித்தமையால் அத்தகைய சேமிப்புக்களுக்கான பிரதான காரணமாக இருக்கவில்லை.

**(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை வேலைக்கமர்த்தாமை**

(i) 2017 ஆம் ஆண்டிற்காக செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு (PMU) மற்றும் 06 செயற்திட்ட அமுலாக்கல் பிரிவுகளிற்காக (PIU) 1,117 உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்துவதற்கு 230 பதவிகளிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருந்தது. ஆனால், 132 பதவிகளிற்கான 461 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்ட அமுலாக்கல் முகவராகிருந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாடுகளை மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவ சேவைகளை திணைக்களத்தின் அனுமதி பெறப்படாத 21 பதவிகளில் 14 பதவிகளிற்கான 17 உத்தியோகத்தர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

**(இ) ஆட்சேர்ப்பு திட்டத்துடன் ஆட்சேர்ப்புக்கள் இணங்காத ஆட்சேர்ப்புக்கள்**

செயற்திட்ட அமுலாக்கல் முகவராகவிருந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றாடல் நிபுணரொருவர் மற்றும் 03 செயற்திட்ட பொறியியலாளர்கள், 03 தொழில்நுட்ப உத்தியோகத்தர், உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் 04 சாரதிகள் போன்றோர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்துடன் இணங்காமல் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் ஆட்சேர்க்கப்பட்டிருந்தது.

**(ஈ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் அமைச்சின் செயற்பாடுகளிற்காக நீர்ப்பாசன திணைக்களத்தின் 06 உத்தியோகத்தர்கள் மற்றும் நீர் வளங்கள் சபையின் உத்தியோகத்தரொருவர் போன்றோரை அமைச்சு வேலைக்கமர்த்தியிருந்தது. மேலும், அமைச்சினால் வேலைக்கமர்த்தப்பட்ட 06 நபர்கள் கொத்மல சர்வதேச பயிற்சி நிறுவகம், நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவு மற்றும் காலநிலை மீட்சி முன்னேற்ற செயற்திட்டத்திற்கு வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.